அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்

வேல் வேல் சக்தி வேல்



முருகன் · செட்டிநாடு பாடல் தொகுப்பு

அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்
அப்பன் பழனியப்பன் – தினம்
அச்சம் தவிர்ப்பவன் ஆறுதல் சொல்பவன்
அப்பன் பழனியப்பன்

கள்ளம் கபடம் இல்லாதவர் தம்மிடம்
காவலில் நின்றிருப்பான் – அங்கு
கால்நடையாய் வரும் மானிட ஜாதியைக்
கண்டு களித்திருப்பான்.

துள்ளிவரும் வடிவேலுக்கு மேல் ஒரு
ஜோதிப் பிழம்பும் உண்டோ? – அந்த
சுப்பையன் போலொரு அற்புத தெய்வத்தைச்
சொல்ல மொழியும் உண்டோ!

வெள்ளிமுகம் பனிரெண்டையும் கண்டபின்
வேறொரு சொர்க்கம் உண்டோ? – ஆண்டி
வேஷத்திலாயினும் வீரத்திலாயினும்
வேலனை வெல்வது உண்டோ!

சித்தர் வணங்கிய சேவற்கொடியோனைச்
சேர்ந்து வணங்கிடுவோம் – அந்த
சிக்கலிலாயினும் செந்திலிலாயினும்
சென்று கனிந்து நிற்போம்!

பக்தருக்கென்று திறந்திருக்கும் தென்
பழனியைக் கண்டுகொள்வோம் – அங்கு
பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும்
செய்து பணிந்திடுவோம்!

செட்டி முருகன் எனும் பெயர் பெற்றவன்
தண்டாயுதம் அல்லவோ – அந்த
சித்திர வள்ளியும் ஜாடையில் மற்றொரு
செட்டி மகள் அல்லவோ!

கொட்டிக் கொடுப்பவன் கோவிலைப் பார்த்திட
கோஷமிட்டே ஓடிடுவோம் – முள்ளும்
குத்தட்டுமே கல்லும் தட்டட்டுமே வலி
கொஞ்சமும் கண்டுகொள்ளோம்!

ஆறும் அறுபதும் ஆன இருபதும்
ஆடி நடந்து செல்வோம் – சில
ஆனந்தப் பாடல்கள் வேலனைப் பாடட்டும்
அன்புடன் ஊர்ந்து செல்வோம்!

ஊறுகள் நேரட்டும் உமையவள் மைந்தனை
உச்சத்தில் வைத்திருப்போம் – கையில்
உள்ளதை அன்னவன் கோவிலுக்கே தந்து
மிச்சத்தில் வாழ்ந்திருப்போம்!

வேலன் குமரன் முருகன் திருச்செந்தில்
வேட்டுவன் கந்தனுக்கு – இரு
கால்கள் நடக்கின்ற நடையினில் தானுயர்
கனிவு நிறைந்திருக்கு!

காலம் வழிவிடும் கச்சிதமாய் சென்று
கால்களிலே விழுவோம் – அவன்
கால்களிலே விழக் கால்கள் நடக்கட்டும்
காவிரிபோல் வளர்வோம்!